# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 103/ந/2025
நாள் 10.07.2025

திரு.பொ.சௌந்தரராஜன்
ஒத்தகால் மண்டபம், கோவை மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர், ஒத்தகால் மண்டபம், மில் கேட், சக்தி நகர், கதவு எண்.58 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பொ. சௌந்தரராஜன் என்பவரின் 10.03.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2025 அன்று பெறப்பட்டு, 103/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர், ஒத்தகால் மண்டபம், மில் கேட், சக்தி நகர், கதவு எண்.58 என்கிற முகவரியில்வசிக்கும் திரு. பொ. சௌந்தரராஜன் என்பவரின் 10.03.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“பொள்ளாட்சி நகராட்சியில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு நீண்ட காலமாக பணப்பயன்கள் வழங்கபடாமல் உள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ கடித எண்.1406/ந/2023–1, நாள் 01.02.2024–ல் மனுதாரர்களின் கோரிக்கை நிர்வாகம் தொடர்பான பொருட்பாடு என்பதால் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் அந்த கடிதத்தின் மேல் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தற்போது பொள்ளாச்சி நகராட்சி ஓய்வு பெற்ற சங்கத்தின் புகார் மனு மீண்டும் நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தனது கடித ந.க.எண்.2193367/2024 நாள் 09.08.2024–ல் மேற்படி கோரிக்கைகளின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க பொள்ளாச்சி நகராட்சி நிர்வாகத்திற்கு அறிவுறுத்தியும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதற்கு காரணம் லஞ்சம் தான். லஞ்சத்தை எதிர்பார்த்து கோப்புகள் கிடப்பில் போடப்பட்டுள்ளது. எனவே தாங்கள் தயவு கூர்ந்து இதனை ஆய்வு செய்து பொள்ளாச்சி நகராட்சியில் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணப்பயன்களை வழங்க தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்’’ என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து பொள்ளாச்சி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 07.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.985/2022/சி–1, நாள் 22.04.2025–ன் வழி கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

"பொள்ளாச்சி நகராட்சியிலிருந்து ஒய்வு பெற்ற 81 பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிட உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை சென்னைக்கு பிரேரணை அனுப்பப்பட்டதில் 62 நபர்களுக்கு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 16 பணியாளர்களின் விண்ணப்பங்கள் உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேலும் ஓய்வூதியதாரர்களால் வழங்கப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிலுவையின்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஓய்வு பெற்ற பணியாளர்கள் 128 நபர்களுக்கும் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் சேமநல நிதி வட்டி தொகை ரூ.1,41,56,384/– வழங்கப்பட்டுள்ளது.

மேலும் திரு. பொ. சௌந்தரராஜன், வருவாய் உதவியாளர் (பணி ஓய்வு) பொள்ளாச்சி நகராட்சியில் பணியாற்றிய காலத்தில் பணம் கையாடல் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு, பின்னர் 3 ஆண்டுகளுக்கு பதவி இறக்கம் செய்யப்பட்டதால் தனியருக்கு மேற்குறிப்பிட்ட தண்டனை காலத்தில் அலுவலக உதவியாளருக்கான ஊதிய விகிதம் (Scale of pay) ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது தனியருக்கு வழங்கப்பட வேண்டிய தேர்வு நிலை வழங்கிட இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.985/2022/சி1 நாள்.15.10.2024ன்படி ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டு மேற்கண்ட உத்தரவு உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் ஒப்புதலுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.985/2022/சி1 நாள்.29.11.2024ன்படி உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் இவ்வுத்தரவு நடைமுறைப்படுத்தப்படுவதுடன் உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பி ஓய்வூதிய மறுநிர்ணயம் செய்யப்படவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது " என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரையும், எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையரையும் 05.05.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் விருந்தினர் மாளிகையில் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ளுமாறு 23.04.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் பொ. சௌந்திரராஜன் என்பவர் 05.05.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"5 சதவீத டெபாசிட் தொகையினை நான்கு பேருக்கு மட்டும் பொள்ளாச்சி நகராட்சியில் வழங்கப்பட்டுள்ளது. மற்ற நபர்களுக்கு வழங்கப்படவில்லை. 2010 லிருந்து ஒய்வு பெற்றவர்களுக்கு டெபாசிட் வழங்கப்படவில்லை.

1988 மற்றும் 1996 ஊதியக்குழுவின் பரிந்துரைகள் இன்று வரை அமல்படுத்தப்படவில்லை.

2020–ம் ஆண்டு வரை மட்டும் பி.எப்.வட்டித் தொகை வழங்கப்படவில்லை.

பொறியியல் பிரிவில் கடைநிலை ஊழியர்களின் ஓய்வூதிய பிரேரணைகளில் கணக்கீடுகள் தவறுதலாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே தாங்கள் தயவு கூர்ந்து இதனை ஆய்வு செய்து பொள்ளாச்சி நகராட்சி ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டிய பண பயன்களை வழங்க தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறு மாண்புமிகு தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டுகிறேன் " என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண். 1353/2025/சி1, நாள் 30.04.2025–ல், நிர்வாக காரணங்களால் தனக்கு பதிலாக நகராட்சி மேலாளர் விசாரணையில் கலந்து கொண்டு விளக்கமளிக்க அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து 05.05.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற நேரடி விசாரணையில் பொள்ளாச்சி நகராட்சி மேலாளர் திரு. வே. பூவேந்திரன் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

" நகராட்சி அலுவலகத்தில் 5 சதவீதம் டெபாசிட் தொகை, விண்ணப்பம் செய்தவர்களில் 4 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2 நபர்களுக்கு டெப்பாசிட் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள 20 நபர்களுக்கு தணிக்கை தடை உள்ளது. மற்றவர்களுக்கு இரண்டு மாதத்திற்குள் வழங்கப்படும்.

மேலும் 1988 மற்றும் 1996–ம் ஆண்டு ஊதியக்குழு பரிந்துரை விண்ணப்பித்துள்ள பணியாளர்களின் பணிப்பதிவேடுகள் சரிபார்க்கப்பட்டு தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் அறிக்கை, ஆணையர் சார்பாக ஆஜரான பொள்ளாச்சி நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் மற்றும் இதர ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக்கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது புகார் மனுவில் பொள்ளாச்சி நகராட்சியில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு நீண்ட காலமாக பணப்பயன்கள் வழங்கபடாமல் உள்ளதாகவும், கோப்புகள் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணப்பயன்களை வழங்க தகுந்த உத்தரவு பிறப்பித்திட கேட்டுக்கொண்டுள்ளார் என்ற விவரம் அறியப்பட்டது.

பொள்ளாச்சி நகராட்சியிலிருந்து ஓய்வு பெற்ற 81 பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிட உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை சென்னைக்கு பிரேரணை அனுப்பப்பட்டதில் 62 நபர்களுக்கு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளதும், 16 பணியாளர்களின் விண்ணப்பங்கள் உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளதும், ஓய்வூதியதாரர்களால் வழங்கப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிலுவையின்றி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதும், ஓய்வு பெற்ற பணியாளர்கள் 128 நபர்களுக்கும் மற்றும் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் சேமநல நிதி வட்டி தொகை ரூ.1,41,56,384/– வழங்கப்பட்டுள்ளதும் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் அறிக்கையின் வாயிலாக அறியவருகிறது.

மேலும், நகராட்சி அலுவலகத்தில் 5 சதவீதம் டெபாசிட் தொகை, விண்ணப்பம் செய்தவர்களில் 4 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதும், 2 நபர்களுக்கு டெபாசிட் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதும், 20 நபர்களுக்கு தணிக்கை தடை உள்ளதாகவும், மற்றவர்களுக்கு இரண்டு மாதத்திற்குள் வழங்கப்படும் எனவும், 1988 மற்றும் 1996–ம் ஆண்டு ஊதியக்குழு பரிந்துரை விண்ணப்பித்துள்ள பணியாளர்களின் பணிப்பதிவேடுகள் சரிபார்க்கப்பட்டு தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் வாயிலாக அறியமுடிகிறது.

எனவே, இந்நேர்வில், ஓய்வு பெற்ற பொள்ளாச்சி நகராட்சி பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய பலன்களை எவ்வித புகார்களுக்கும் இடம் கொடாவண்ணம் வரிசைக்கிரமப்படி துரிதமாக வழங்கிட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்கள் தலைமையில் ஒரு குழுவினை அமைத்து காலமுறை அடிப்படையில் ஆய்வு செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவர் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 10–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.பொ.சௌந்தரராஜன்
எண்.58, சக்தி நகர் மில் கேட்,
ஒத்தகால் மண்டபம், கோயம்புத்தூர் – 642120.
கோயம்புத்தூர் மாவட்டம்,

2) நகராட்சி ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம்,
திருப்பூர்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்